பக்கங்கள்:-14

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 23 | புதன்கிழமை | 09.10.2024 | அதிர்வு 068

## வடக்கு, கிழக்கில் இம்முறை அதிக சுயேச்சைக் குழுக்கள்

(ந.லோகதயாளன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் இம்முறை அதிக சுயேச்சைக் குழுக்கள் களம் இறக்கப்பட்டு கட்டுப் பணம் செலுத்தியுள்ளன.

இதற்கமைய அம்பாறை 06



# வடக்கு, கிழக்கில் 'சங்கு' இன்று வேட்புமனுத் தாக்கல்

## திருமலையில் மாத்திரம் தமிழரசுடன் இணைந்து வீட்டுச் சின்னத்தில் போட்டி

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜன நாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணிபோட்டி யிடும் வடக்கு, கிழக்கின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் இன்று புதன்கிழமை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய வுள்ளது. 06

# குழப்பங்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர்களின் விவரம் இறுதி

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் இறுதியாகியுள்ளது.

சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணிக்குள் அண்மையில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. வி.மணிவண்ணனுக்கு முன்னுரிமையளிப்பதாகத் தெரிவித்து அந்தக் கட்சியின் மூத்தவர்கள் பலர் அதிருப்தியடைந்து, கட்சி செயற்பாட்டிலிருந்து ஒதுங்கி விட்டனர்.

இதைத் தொடர்ந்து வி.மணிவண்ணன் தரப்பே வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது. 06



# பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு அரசமைப்பு பேரவை நேற்று அங்கீகாரம்!



சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவைப் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் ஜனாதிபதியின் முடிவுக்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 06



தமிழர் தம் அரசியலில் இன்றும் பிரதான பேசு பொருளாக இருப்பது தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் ராஜினாமா விவகாரம்தான். அதனால் எனது இன்றைய கருத்துப் பகிர்வும் அதை ஒட்டியே தொடர்கின்றது.

மாவை சேனாதிராஜா இப்படித் தமிழரசுக் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்வது என்று அறிவிப்பது இது முதல் தடவை அல்ல.

இதற்கு முன்னரும் ஒரு தடவை இப்படி ராஜினாமாக் கடிதம் கொடுத்துவிட்டு, நீண்ட காலம் கட்சித் தலைவராக தொடர்ந்தவர் அவர். ஆனால் அப்போது அவர் தமது ராஜினாமாக் கடிதத்தை, இப்போது மாதிரி அல்லாமல், சரியானவருக்கு முகவரியிட்டு சரியாகக் கொடுத்திருந்தார். 06




# தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இணைந்தார் பாரத் அருள்சாமி

## கண்டி மாவட்ட வேட்பாளராகப் போட்டி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் உப தலைவர் பாரத் அருள்சாமி தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இணைந்துள்ளார்.

நேற்று கொழும்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம் இருந்து ஜனநாயக மக்கள் முன்னணியின் அங்கத்துவத்தைப் பெற்று கொண்ட பாரத் அருள்சாமி கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிடுவார் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் முருகேசு பரணிதரன் கொழும்பில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் அறிவித்தார்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறியதாவது:–

“ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. தேர்தல் முடிவுகள் மாவட்ட ரீதியாக அறிவிக்கப்பட்டாலும், தேர்தலில் முழு நாடும் ஒரே தேர்தல் மாவட்டமாக இருந்தது. முழு நாட்டுக்கும் பொதுவான வேட்பாளர்கள்தான் போட்டியிட்டார்கள். அதில் நண்பர் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாம் இன்று எதிர்கொள்வது நாடாளுமன்றத் தேர்தல். இது மாவட்ட ரீதியாக நடைபெறும் தேர்தல். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வெவ்வேறு வேட்பாளர்கள். ஆகவே, ஜனாதிபதித் தேர்தலைப் போல் இதில் வாக்களிக்கத் தேவை இல்லை. நமது மாவட்டங்களில் நமது மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றம் போக வேண்டும். அதுதான் எமது அபிலாஷைகளில் தேசிய அரங்குக்குக் கொண்டு செல்லும். சர்வதேச அரங்குக்கும் கொண்டு செல்லும்.

இன்று, தேசிய மக்கள் சக்தி அரசு ஒரு அழகான இருட்டறையைப் போல் இருக்கின்றது. வெளியே “சம உரிமை”, “நாம் இலங்கையர்”, “சட்டத்தின் ஆட்சி” என்ற பெயர்ப்பலகைகள் இருக்கின்றன. இந்தப் பெயர்ப்பலகை கோஷங்கள் தேசிய மக்கள் சக்தியின் சொந்தக் கோஷங்கள் இல்லை. அவை எங்கள் கோஷங்களும் ஆகும். நான் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்தபோது பேசிய, எழுதிய கோஷங்கள் ஆகும்.

அழகான இருட்டறைக்கு உள்ளே என்ன இருக்கின்றது என எவருக்கும் தெரியவில்லை. மலையக மக்களின் வீட்டு காணி உரிமை அங்கே இருக்கின்றதா? வாழ்வாதார காணி உரிமை இருக்கின்றதா? பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டின் மிகவும் பின்தங்கிய மக்களாக ஏற்றுக்கொள்ளும் கொள்கை இருக்கின்றதா? “சிஸ்டம் சேஞ்” முறை மாற்றத்தைப் பெருந்தோட்டத்துறையில் ஆரம்பித்து, தோட்டத் தொழிலாளர்களைப் பெருந்தோட்டத் துறையில் கூட்டுறவு பங்காளிகளாக மாற்றும் கொள்கை இருக்கின்றதா? என்பதை இன்று தேசிய மக்கள் சக்தி அறிவிக்க வேண்டும்.

இது எதையும் பகிரங்கமாக அறிவிக்காமல், மலையக மக்களின் வாக்குகளை நாடாளுமன்றத் தேர்தலில் கோர தேசிய மக்கள் சக்திக்கு உரிமை கிடையாது. இது தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். நாம் இன்று எதிர்கொள்வது மாவட்டரீதியாக நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல் என்பதை நாம் மனதில்கொள்ள வேண்டும்.

தம்பி பாரத் அருள்சாமியை ஜனநாயக மக்கள் முன்னணிக்கு உள்ளே வரவேற்கிறேன். தமிழ் முற்போக்குக் கூட்டணி வேட்பாளராக அவர் போட்டியிடுவார். அவர் நாடாளுமன்ற உறுப்பினாராக இருந்து கொண்டு கட்சி மாறவில்லை. இன்று எமது மலைநாட்டு முற்போக்கு அணியில் தன்னை அவர் இணைத்துக்கொண்டுள்ளார். தமிழ் பிரதிநிதித்துவத்துக்குச் சமீபத்தில் கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற துரதிஷ்ட சம்பவத்துக்கு அவர் பரிகாரம் தேடுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.” – என்றார்.





# மலையக ரயில் போக்குவரத்தை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானம்

மலையக மார்க்க ரயில் போக்குவரத்தை மட்டுப்படுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மலையக மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, மேற்படி காலப்பகுதியில் கொழும்பு கோட்டையிலிருந்து எல்ல ரயில் நிலையம் வரையே ரயில் போக்குவரத்து முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தோ – ஸ்ரீலங்கா கூட்டு படப்பிடிப்பு செயற்றிட்டம் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கண்டி மாவட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் புதிய அரசியல் தொழிற்சங்க அமைப்பாளர் நியமனம்



கண்டி மாவட்டத்திற்கான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் தொழிற்சங்க அமைப்பாளராக பாலகிருஷ்ணன் பிரசாத்குமார் நேற்று நியமிக்கப்படுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பாலகிருஷ்ணன் பிரசாத்குமார் கண்டி மாவட்டத்திற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணியின் சிரேஷ்ட அமைப்பாளராக செயற்பட்டுள்ளார் என அதன் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் மற்றும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகுவதாக பாரத் அருள்சாமி கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கு நேற்று முன்தினம் கடிதம் அனுப்பியிருந்தார்.

# 185,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி முறிகளை ஏலம் விட தீர்மானம்

## மத்திய வங்கி அறிவிப்பு

185,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி முறிகளை இன்று ஏலத்தில் விடுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதற்கான விலைமனுக்களை இன்று முற்பகல் 11 மணி வரை சமர்ப்பிக்க முடியும்.

திறைசேரி முறிகளுக்கான கொடுப்பனவுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை செலுத்த வேண்டுமெனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.




# எம்.பிக்களுக்கு வழங்கப்பட்ட முத்திரைகள் இடைநிறுத்தம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனைத்து முத்திரைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வழங்கப்பட்டுள்ள அனைத்து முத்திரைகளையும் நாடாளுமன்ற தபால் அலுவலகத்திடம் ஒப்படைக்குமாறு தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்காக வருடத்திற்கு 10,000 முத்திரைகள் வழங்கப்படுவதுடன், இவற்றிற்காக 500,000 ரூபா செலவிடப்படுவதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி; 145 குடும்பங்களுக்கு பாதிப்பு



நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, கிழக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களின் சில இடங்களிலும் இவ்வாறு 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதனிடையே, புளத்சிங்கள – குடா கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்கள் அதிக அளவில் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, மேற்படி இரு மாவட்டங்களில் 145 குடும்பங்களைச் சேர்ந்த 716 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அச்சுறுத்தல் மதிப்பீடுகளை மேற்கொள்ள விசேட குழு

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நிலவும் அச்சுறுத்தல் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக விசேடக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பில் எந்தவித மாற்றமும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்படவில்லை.

இந்தநிலையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள



குழு தற்போது அதன் பணிகளை ஆரம்பித்துள்ளது.

எனவே, அந்த குழுவினால் வழங்கப்படும் மதிப்பீட்டு முடிவுகளுக்கமைய, அச்சுறுத்தலின் தன்மைக்கு ஏற்ப, முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்புக்காக நியமிக்கப்படும் அதிகாரிகளின் எண்ணிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.”– என்றார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அப்போது கொடுத்த ராஜினாமாக் கடிதம் குறித்து நீண்ட பல காலமாக கட்சியின் செயலாளர் வெளிப்படுத்தாத நிலையில், தமது ராஜினாமாக் கடிதம் வழங்கப்பட்டு விட்ட போதும், பல ஆண்டுகள் மாவை சேனாதிராஜா தலைவர் பதவியில் தொடர்ந்தார்.

அவரது அந்த ராஜினாமாக் கடிதத்தை, அப்போது கட்சியின் செயலாளராக இருந்த துரைராஜசிங்கமும் அல்லது பெருந்தலைவர் இரா சம்பந்தரும் பொருட்படுத்தவில்லை.

ராஜினாமாக் கடிதம் குறித்து அறிந்திருந்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் சேர்ந்து அவ்விடயத்தை மூடி மறைக்க, அந்த ராஜினாமாக் கடித நாடகம் அப்போது அப்படியே அடங்கி போயிற்று. மாவையும் பதவியில் தடையின்றி நீடித்தார்.

18-3-2018 திகதியிடப்பட்ட அந்த ராஜினாமாக் கடிதம் மாவையின் தெல்லிப்பளை வீட்டில் வைத்து சிவஞானம் முன்னிலையில் அப்போதைய செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டிருந்தேன்.

அப்போது அந்த ராஜினாமா கடிதத்தை முறையாக செயலாளருக்கு முகவரி இட்டு அவரிடம் ஒப்படைத்த மாவை, இப்போது அதனை நீதிமன்றத்தினால் தலைவராகச் செயல்பட தடை விதிக்கப்பட்ட ஸ்ரீதரனுக்கு முகவரியிட்டு தலைவர் பதவியை அவரை முன்னெடுக்க வழிப்படுத்தி, அவருக்கு அதனை அனுப்பி வைத்திருக்கிறார். நல்ல வேடிக்கை.

2018 இல் கொடுக்கப்பட்ட ராஜினாமாக் கடிதம் பற்றி சம்பந்தனுக்கு தெரிவிக்கப்பட்ட போது 'அதை கோப்பில் (கோவையில்) போட்டுவிட்டு உங்கள் வேலையைப் போய்ப் பாருங்கள்!' - என்று அப்போதைய செயலாளரை அவர் வழிப்படுத்தினார் என நான் அறிந்திருந்தேன்.

அந்த ராஜினாமாக் கடிதத்தில் மாவை சேனாதிராஜா இன்னொரு திருக்கூத்தும் செய்திருந்தார் என்றும் நினைவு உண்டு.

தந்தை செல்வநாயகம் மறைந்த போது, அதைத் தொடர்ந்து தனக்கு உரியதாக இருந்த காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியை அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் 1977ஆம் ஆண்டு பொது தேர்தலில் போட்டியிடுவதற்குத் தாமே 'பெரும் மனது பண்ணி' விட்டுக் கொடுத்து, தாமே முன்வந்தளித்தார் என்ற சாரப்பட அந்த ராஜினாமாக் கடிதத்தில் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவித்திருந்தார் என்றும் எனக்கு நினைவு உண்டு.

மாவையின் முதலாவது இராஜினாமாக் கடிதம் நிச்சயம் அப்போது செயலாளராக இருந்த துரைராஜசிங்கத்திடம் தொடர்ந்து இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதை ஒரு தடவை பகிரங்கமாகப் பிரசுரித்தால் மாவையின் பதவி விலகல் (ராஜினாமாக்) கடிதங்களின் மகாத்மியத்தை முழுமையாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

---

## வடக்கு, கிழக்கில் இம்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தில் 37 சுயேச்சைக் குழுக்களும், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 22 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இதேபோன்று வன்னி மாவட்டத்தில் 21 சுயேச்சைக் குழுக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் அதிக சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்திய மாவட்டங்களாகவும் வடக்கு, கிழக்கு காணப்படுகின்றது.

இதேநேரம் சுயேச்சையாகப் போட்டியிடுவோர் கட்டுப்பணம் செலுத்தும் காலம் இன்னமும் காணப்படுவதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

இலங்கையில் அதிக மக்கள் தொகை கொண்ட கொழும்பு மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்களும், கம்பஹா மாவட்டத்தில் 12 சுயேச்சைக் குழுக்களுமே கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

---

## குழப்பங்களுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் வேட்பாளர் பட்டியலில் வி.மணிவண்ணன், வ.பார்த்தீபன், செல்டன் (யாழ் மத்திய கல்லூரி கிரிக்கெட் பயிற்சியாளர்), சிற்பரன், ஜெனிட்டன் (கோப்பாய் - விளையாட்டு உத்தியோகத்தர்), உமாகரன் இராசையா, மிதிலைச்செல்வி (முன்னாள் தமிழரசுக் கட்சி மகளிர் அணி உறுப்பினர்), கோகிலவாணி (கிளிநொச்சி), சாவகச்சேரியைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## வடக்கு, கிழக்கில் 'சங்கு'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத் தேர்தலில் ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றன.

இந்தக் கூட்டணி திருகோணமலை தவிர, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுகின்றது. மேற்படி கூட்டணி திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் கூட்டணியாக வீட்டுச் சின்னத்தில் களமிறங்குகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தனித்துப் போட்டியிடும் மாவட்டங்களில் வேட்பாளர் பட்டியல் இறுதியடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் ஜெ. நவீந்திரா (வேந்தன்), ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன், சசிகலா ரவிராஜ், பா. கஜதீபன், சிவகுமாரன், ஜயனந்தன் (ஜனா) ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திருகோணமலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் களமிறங்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 7 வேட்பாளர்களில் 3 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மூவர் பட்டியல் இறுதியானதும் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரிடம் வழங்கப்படும் என்று தெரியவருகின்றது.

---

## பதில் பொலிஸ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த மாதம் 27 ஆம் திகதி அரசமைப்பின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவைப் பதில் பொலிஸ்மா அதிபராக நியமித்தார்.

அன்றைய தினமே பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதியின் செயலாளர் நியமனக் கடிதத்தை வழங்கியிருந்தார்.

இந்தநிலையில் நேற்று அரசமைப்பு பேரவை இந்த நியமனத்துக்குத் தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.



# அரசு இராஜதந்திர உறவுகளைப் பேணுவதில் அனைத்து நாடுகளுடனும் சமமாக செயற்படும்

## அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் தெரிவிப்பு




தற்போதைய அரசாங்கம் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதில் அனைத்து நாடுகளுடனும் சமமான முறையில் செயற்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவைப் போன்று சீனாவுடனும் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் அமெரிக்கா, ரஷ்யா, கியூபா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடனும் இராஜ தந்திர உறவுகளைப் பேணுவதற்குச் செயற்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சீன இராணுவப் பயிற்சிக் கப்பல் ஒன்று இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தக் கப்பல் இந்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கப்பல் வருகையால் இலங்கையின் பாதுகாப்புக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது எனவும் முன்னதாக அமெரிக்க, இந்திய மற்றும் ஜேர்மன் போன்ற நாடுகளின் போர்க்கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய இராஜதந்திர உறவுகளில், தாங்கள் அனைத்து நாடுகளையும் சமமான முறைமையில் கையாளுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# அதிகரிக்கப்பட்ட உர மானியம் திங்கள் முதல் வழங்கப்படும்



அதிகரிக்கப்பட்ட உர மானியத்தை எதிர்வரும் திங்கள் கிழமை முதல் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும், வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கு உர மானியத்தை அதிகரிப்பதற்குக் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும், நாட்டில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதனைத் தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியது.

இந்தநிலையில், கமநல சேவை திணைக்களம் மற்றும் பல விவசாய அமைப்புகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய அதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, ஒரு ஹெக்டயர் நிலப்பரப்புக்கு 10 ஆயிரம் ரூபாயாக வழங்கப்பட்ட உர மானியம், தற்போது 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பெரும்போக நடவடிக்கைகள் அம்பாறையில் எதிர்வரும் திங்கள் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், அந்தப் பகுதி விவசாயிகளுக்கு முதற்கட்டமாக 15 ஆயிரம் ரூபாயும், பின்னர் எஞ்சிய 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

இந்த பணிகளுக்காக 2 பில்லியன் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கிடப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.



# யானை சின்னத்தில் இ.தொ.கா. போட்டி

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிட முடிவுசெய்துள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எந்தக் கூட்டணியில் மற்றும் எந்தச் சின்னத்தில், எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர் எனக் கருத்தாடல்கள் இடம்பெற்று வந்த நிலையில், நேற்று அதற்கான இறுதி முடிவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடம் அறிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் சக்திவேல் ஆகியோர் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தபால் வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்பட்டது



பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு 12 மணியுடன் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்பது நிறைவடையவிருந்தது.

எனினும், தபால் செயற்பாடுகளில் காணப்பட்ட தாமதம் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய 2024 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை விண்ணப்பங்களை ஏற்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அன்றைய நாள் நிறைவடைவதற்கு முன்னர் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் அவற்றை ஒப்படைக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் எந்தவொரு காரணத்திற்காகவும் மேற்படி காலவரையறை மீண்டும் நீடிக்கப்படமாட்டாதெனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுயேச்சை மகாத்மியம்

ஜனநாயகத் தேர்தல் கட்டமைப்பு முறைமையிலே அரசியல் கட்சிகளுக்கு எத்துணை முக்கியத்துவம் உள்ளதோ, அதே அளவு முக்கியத்துவம் கட்சிகள் சாராத சுயாதீன அமைப்புக்கள் மற்றும் சுயேச்சைத் தரப்புகளுக்கும் உண்டு.

ஜனநாயக முறையின் சிறப்பம்சங்களில் ஒன்று சுயேச்சை குழுக்களின் பங்களிப்பாகும்.

தொகுதி வாரி தேர்தல் முறைமைகளில் சுயேச்சை வேட்பாளர்கள் கணிசமாகப் பங்களித்து வந்திருக்கின்றமையை 1977 க்கு முன்னர் வரை நடைபெற்று வந்த தொகுதி வாரித் தேர்தல் முறைமைகளிலே நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மாவட்ட ரீதியில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை வந்த பின்னர், சுயேச்சைத் தரப்புகளின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பெருமளவில் குறைந்து விட்டதையும், சுயேச்சைகளின் பங்களிப்பு அருகி வருகின்றமையையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

மாவட்ட ரீதியில் பல்வேறு சுயேச்சை நபர்களை இணைத்து சுயேச்சைக் குழுக்கள் செயற்பட வேண்டி இருப்பது இந்த இக்கட்டுக்கு ஒரு காரணமாகும்.

விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் - அதுவும் மாவட்ட ரீதியான தேர்தலில் - தனி நபர்கள் சுயேச்சையாக இல்லாமல் குழுக்களாக - சுயேச்சைகளின் குழுக்களாக களமிறங்க வேண்டிய பின்னணியில் - அவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகுவது அருகி வருகின்றது. முயல் கொம்பு போன்றும், மணலைக் கயிறாக திரிப்பது மாதிரியும் அது மாறி வருகின்றது.

சுயேச்சை என்பது சுய இச்சையின் அடிப்படையில் செயற்படுவது என்பதை அர்த்தப்படுத்தும்.

சுயமாக சிந்தித்துச் செயலாற்றி, சுய விருப்பின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுவது இந்த சுயேச்சை பங்களிப்பாகும். ஆனால் தனி சுயேச்சைகள் இலங்கையின் ஜனநாயக முறைமையில் பங்கு பற்ற வாய்ப்புகள் குறைவு. சுயேச்சைக் குழுக்கள் ஓர் அணியாகச் செயல்படவே தேர்தல் முறைமையில் இடம் உண்டு. - தனியன்களாக அல்ல.

அப்படிப் பலபேரின் கூட்டிணைவாகச் செயற்படவே சுயேச்சை தரப்புக்கு இலங்கையில் அனுமதியுண்டு. சுயேச்சைகள் தனியன்களாக அல்லாமல் குழுக்களாக மட்டுமே இயங்க முடியும் என்பதால் சுய இச்சையின் அடிப்படையில் செயல்படும் பண்பியல்பை அவை இழந்து விடுகின்றன. ஆக மாவட்ட ரீதியில் நடைபெறும் இலங்கையின் பொதுத் தேர்தல் சுயேச்சை என்ற தரப்பினுடைய தனித்துவத்தை பேணும் ஒன்றாக இல்லை என்பது கண் கூடு.


இம்முறை இலங்கைப் பொதுத் தேர்தலில் தமிழர் தாயகத்திலேயே அதிக சுயேச்சைக் குழுக்கள் களம் இறக்கப்பட்டு இதுவரை கட்டுப் பணம் செலுத்தியுள்ளன.

அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் 37 சுயேச்சைக் குழுக்களும், யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா 22 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இதேபோன்று வன்னியில் 21 சுயேச்சைக் குழுக்களும் திருகோணமலையில் 17 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

இதேநேரம் கொழும்பு மாவட்டத்தில் 17 சுயேச்சைக் குழுக்களும், கம்பஹாவில் 12 சுயேச்சைக் குழுக்களுமே கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# ஹரியானாவில் பா.ஜ.க. ஆட்சி!

## ஜம்மு காஷ்மீர் முதல்வர் ஆகிறார் உமர் அப்துல்லா

ஹரியானாவில் மொத்தமுள்ள 90 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 48 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள பா.ஜ.க, மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க உள்ளது.

ஜம்மு காஷ்மீரில் மொத்தமுள்ள 90 தொகுதிகளில் இண்டியா கூட்டணி 49 தொகுதிகளில் வெற்றி பெற்றிருப்பதால் அங்கு உமர் அப்துல்லா தலைமையில் கூட்டணி அரசு அமைய உள்ளது.

ஹரியானா சட்டப்பேரவையின் மொத்தமுள்ள 90 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 5 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இதில், 68 வீத வாக்குகள் பதிவாகி இருந்தன. மொத்தமுள்ள 2 கோடியே 3 லட்சத்து 54 ஆயிரத்து 350 வாக்காளர்களில் ஒரு கோடியே 38 லட்சத்து 19 ஆயிரத்து 776 வாக்குகள் பதிவாகின.

தேர்தலுக்குப் பிந்தைய பல்வேறு கருத்துக்கணிப்புகள், ஹரியானாவில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்றும் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் என்றும் கூறின.

இந்நிலையில், தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நேற்று காலை 8 மணிக்குத் தொடங்கியது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன.

இரவு 7 மணி நிலவரப்படி மொத்தமுள்ள 90 தொகுதிகளில் 89 தொகுதிகளின் முடிவுகளை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதன்படி, பா.ஜ.க. 48 தொகுதிகளில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பெரும்பான்மையை பெற்றிருப்பதால் தொடர்ந்து மூன்றாவது முறையாக பா.ஜ.க. ஆட்சி அமைக்க உள்ளது. இந்த தேர்தலில் 36 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி, 1 தொகுதியில் முன்னிலை வகிக்கிறது. பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட இந்திய தேசிய லோக் தளம் 2 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. சுயேச்சைகள் 32 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன.

ஜம்மு காஷ்மீரில் மொத்தமுள்ள 90 தொகுதிகளின் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி, தேசிய மாநாட்டுக் கட்சி தலைமையிலான இண்டியா கூட்டணி 49 இடங்களை கைப்பற்றி உள்ளது. இதையடுத்து, தேமாக துணைத் தலைவரும் முன்னாள் முதல்வருமான உமர் அப்துல்லா முதல்வராக பதவி ஏற்க உள்ளார்.

90 உறுப்பினர்கள் கொண்ட ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு செப்டம்பர் 18, 25, ஒக்டோபர் 1 ஆகிய தேதிகளில் 3 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில், இண்டியா கூட்டணி சார்பில், தேசிய மாநாட்டுக் கட்சி 51 தொகுதிகளிலும், காங்கிரஸ் 32 தொகுதிகளிலும், சி.பி.எம். ஒரு தொகுதியிலும், ஜம்மு காஷ்மீர் தேசிய சிறுத்தைகள் கட்சி ஒரு தொகுதியிலும் போட்டியிட்டன. நட்பு ரீதியில் 5 தொகுதிகளில் போட்டியிடவும் தீர்மானிக்கப்பட்டது.

பா.ஜ.க. தனித்து போட்டியிட்டது. மொத்தமுள்ள 62 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்திய அக்கட்சி மீதமுள்ள 28 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை நிறுத்தவில்லை. மெகபூபா முப்தி தலைமையிலான மக்கள் ஜனநாயகக் கட்சி 81 தொகுதிகளில் போட்டியிட்டது. இந்த தேர்தலில், மொத்தமாக 63.88 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்த தேர்தலில் மொத்தமுள்ள 90 தொகுதிகளில் தேசிய மாநாட்டுக் கட்சி 42 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதன் கூட்டணி கட்சியான காங்கிரஸ் 6 தொகுதிகளிலும், சி.பி.எம். ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளன. மொத்தத்தில் இண்டியா கூட்டணி 49 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இதன் காரணமாக இக்கூட்டணி ஆட்சி அமைப்பது உறுதியாகி உள்ளது.

இந்நிலையில், ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா, ஜம்மு காஷ்மீரின் புதிய முதல்வராக உமர் அப்துல்லா பதவியேற்பார் என தெரிவித்துள்ளார். மேலும் அவர், ஓகஸ்ட் 5 இல் எடுக்கப்பட்ட முடிவை (சட்டப்பிரிவு 370 நீக்கம்) மக்கள் ஏற்கவில்லை என்பது இந்த தேர்தலில் தெளிவாகி இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

# க்ரிமியாவின் எரிபொருள் முனையம் மீது தாக்குதல் நடத்தியது உக்ரைன் இராணுவம்





ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட க்ரிமியாவில் உள்ள எரிபொருள் முனையத்தைத் தாக்கியுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் இராணுவம் தமது சமூக ஊடக பக்கத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் போர் நடவடிக்கைகளுக்கு மேற்படி முனையத்திலிருந்தே எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ரஷ்ய இராணுவத்தை வலுவிழக்கச் செய்யும் முயற்சியாகவே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

# பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை போர் தொடருமென இஸ்ரேல் அறிவிப்பு









காசாவில் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்படும் வரையில் போர் தொடருமென இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஹமாஸ் – இஸ்ரேல் இடையிலான போர் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது.

இதனை நினைவுகூர்ந்து ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே இஸ்ரேல் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், படுகொலையைக் கண்டிக்கத் தவறியதாக ஐக்கிய நாடுகள் சபை மீதும் இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

இதன்படி, அப்பாவிகளைப் பாதுகாப்பதற்கும், தீமையைக் கண்டனம் செய்வதற்குமான அடிப்படை ஆணையில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் ஹமாஸ் நடத்திய தாக்குதலில் சுமார் 1,200 பேர் உயிரிழந்த நிலையில், 250 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டதாக இஸ்ரேலின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, காசாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அத்தியாவசிய பொருள்களின் விலைப்பட்டியலை வெளியிட்டது அரசாங்க தகவல் திணைக்களம்

**Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute**
**Data Management Division**

| Variety | 8/10/2024 Peliyagoda Market | 8/10/2024 Kandy Market | 8/10/2024 Dambulla Market | 7/10/2024 Meegoda Market | 8/10/2024 Norochchole Market | 8/10/2024 Thambuththegama Market | 8/10/2024 Keppetipola Market | 8/10/2024 Nuwaraeliya Market | 8/10/2024 Bandarawela Market | 7/10/2024 Veyangoda Market |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Up Country Vegetable** | | | | | | | | | | |
| Beans | 220 - 300 | 250 - 300 | 220 - 300 | 360 - 400 | - | 330 - 360 | 200 - 250 | 220 - 260 | 270 - 320 | 300 - 380 |
| Carrot | 80 - 100 | 90 - 100 | 80 - 90 | 90 - 130 | - | 100 - 120 | 60 - 80 | 90 - 100 | 80 - 90 | 100 - 120 |
| Leeks | 120 - 160 | 120 - 130 | 120 - 150 | 150 - 180 | - | 160 - 180 | 120 - 130 | 140 - 150 | 110 - 130 | 140 - 160 |
| Beet root | 70 - 100 | 80 - 90 | 55 - 70 | 80 - 100 | 50 - 70 | 80 - 90 | - | - | 90 - 110 | 80 - 110 |
| Beet root (N Eliya) | - | 100 - 120 | 75 - 90 | | - | - | 80 - 100 | 80 - 100 | - | - |
| Knolkhol | 80 - 100 | 80 - 90 | 70 - 100 | 110 - 130 | - | 100 - 120 | 60 - 80 | 70 - 90 | 90 - 100 | 110 - 150 |
| Raddish | 50 - 60 | 50 - 60 | 40 - 50 | 80 - 100 | 20 - 30 | 70 - 80 | 40 - 50 | 50 - 70 | 35 - 45 | 70 - 80 |
| Cabbage (N'Eliya) | - | 110 - 120 | 120 - 130 | 100 - 150 | - | 160 - 180 | 50 - 70 | 100 - 120 | - | - |
| Cabbage (Kandy) | 100 - 120 | 70 - 90 | 80 - 100 | - | 100 - 150 | - | - | - | 80 - 90 | 140 - 170 |
| Tomato | 230 - 260 | 180 - 200 | 150 - 200 | 220 - 260 | 150 - 180 | 150 - 180 | 180 - 200 | 170 - 200 | 180 - 210 | 200 - 240 |
| **Low country Vegetable** | | | | | | | | | | |
| Ladies Fingers | 100 - 140 | 90 - 100 | 70 - 80 | 100 - 130 | 100 - 120 | 70 - 100 | - | - | 100 - 110 | 90 - 120 |
| Brinjals | 120 - 150 | 80 - 120 | 80 - 120 | 120 - 140 | - | 100 - 150 | 70 - 80 | - | 80 - 90 | 120 - 180 |
| Capsicum | 400 - 550 | 400 - 450 | 380 - 450 | 450 - 530 | 280 - 350 | 400 - 480 | 500 - 550 | 500 - 540 | 480 - 520 | 350 - 500 |
| Pumpkin | 50 - 70 | 70 - 90 | 70 - 80 | 65 - 90 | 30 - 40 | 50 - 65 | 70 - 80 | - | 70 - 80 | 65 - 90 |
| Cucumber | 80 - 100 | 80 - 90 | 80 - 100 | 70 - 100 | 40 - 60 | 60 - 80 | 80 - 100 | - | 80 - 90 | 80 - 110 |
| Bitter Gourd | 280 - 320 | 300 - 330 | 280 - 340 | 300 - 350 | 180 - 280 | 280 - 350 | - | - | 300 - 330 | 320 - 350 |
| Snake Gourd | 150 - 160 | 180 - 200 | 140 - 160 | 160 - 180 | 100 - 120 | 130 - 170 | - | - | 160 - 170 | 170 - 190 |
| Drumstick | 300 - 450 | 300 - 350 | - | - | 250 - 280 | - | - | - | - | - |
| Luffa | 180 - 200 | 200 - 240 | 120 - 140 | 170 - 250 | 160 - 220 | 120 - 150 | - | - | 180 - 200 | 180 - 220 |
| Long Beans | 150 - 180 | 130 - 150 | 140 - 180 | 150 - 200 | 80 - 130 | 150 - 250 | - | - | 150 - 160 | 120 - 170 |
| Ash Plantains | 100 - 150 | 130 - 160 | 130 - 160 | 160 - 180 | 130 - 150 | 130 - 160 | - | - | - | 150 - 180 |
| Green Chillies | 200 - 250 | 230 - 250 | 180 - 220 | 220 - 250 | 180 - 220 | 200 - 250 | 220 - 250 | - | 230 - 250 | 220 - 280 |
| Lime | 350 - 400 | 430 - 450 | 390 - 450 | 460 - 500 | - | 280 - 350 | - | - | - | 400 - 500 |
| Sweet Potatoe | 80 - 100 | 70 - 90 | 40 - 55 | 60 - 80 | - | 60 - 70 | 90 - 100 | - | 70 - 90 | 70 - 100 |
| Manioc | 80 - 100 | 80 - 90 | 45 - 60 | 90 - 100 | 70 - 80 | 70 - 80 | 80 - 100 | - | - | 100 - 120 |
| Eggplant | 150 - 180 | 150 - 170 | 150 - 160 | 190 - 230 | 130 - 140 | 120 - 150 | | | 180 - 200 | 180 - 210 |
| Potato(Imported) | 145 - 175 | 160 - 180 | 150 - 170 | 160 - 175 | - | 150 - 185 | - | - | 165 - 180 | 150 - 180 |
| Potato (Welimada) | 180 - 190 | 190 - 200 | 170 - 180 | 190 - 220 | - | - | 170 - 200 | - | 180 - 190 | 190 - 220 |
| Potato (Nuwaraeliya) | 220 - 230 | 220 - 230 | - | 230 - 250 | - | - | - | 230 - 240 | - | - |
| B'Onion Imported | 165 - 270 | 190 - 260 | 200 - 250 | 195 - 260 | - | 200 - 265 | 185 - 265 | - | 195 - 275 | 185 - 250 |
| Big-onion Local | 250 - 275 | 220 - 260 | 220 - 250 | 240 - 265 | - | 150 - 240 | 250 - 250 | - | 245 - 260 | 235 - 250 |
| **Banana** | | | | | | | | | | |
| Ambul(Rs/Kg) | 100 - 120 | 130 - 150 | | | | | | | | - |
| Kolikuttu | 230 - 250 | 340 - 350 | | | | | | | | - |
| Seeni | 120 - 130 | 100 - 130 | | | | | | | | - |
| Anamalu (Rs/Fruits) | 28 - 34 | - | | | | | | | | - |
| Papaya (Rs/Kg) | 80 - 140 | 140 - 150 | | | | | | | | - |
| Passion Fruits(Rs/Fruit | 50 - 55 | | | | | | | | | - |
| **Other Fruits (Rs/Fruit)** | | | | | | | | | | |
| Pineapple - Large | 500 - 550 | | | | | | | | | |
| - Medium | 400 - 450 | | | | | | | | | - |
| - Small | 300 - 350 | | | | | | | | | - |
| Mango - Betti | 42 - 50 | | | | | | | | | |
| - Karathakol | 150 - 170 | | | | | | | | | - |
| Woodapple | 20 - 24 | | | | | | | | | - |
| Avocado | 100 - 120 | | | | | | | | | - |
| Orange | 60 - 70 | | | | | | | | | - |

Data Management Division
Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute
P.O. Box 1522

அரிசி மற்றும் மரக்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைப்பட்டியலை அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் வழங்கியுள்ள மேற்படி விலைப்பட்டியலை அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

புறக்கோட்டை பொது சந்தை உள்ளிட்ட பிரதான சந்தைகளில் விற்பனை செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆதரவு

## வாசுதேவ நாணயக்கார அறிவிப்பு



எதிர்வரும் பொதுத் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்குத் தங்களது கட்சி ஆதரவு வழங்கவுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கும் வகையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக இடதுசாரி முன்னணி போட்டியிடவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முயன்ற போதிலும் அது சாத்தியப்படவில்லை.

அவர்களது கொள்கை ரீதியான பிரச்சினை காரணமாக அந்த முயற்சிகள் கைகூடவில்லை.

பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவோம்.

தனித்துப் போட்டியிட்டாலும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு அளிப்போம்.

எங்களுக்கு அளிக்கும் வாக்குகளைத் தேசிய மக்கள் சக்திக்கு அளிக்கப்படும் வாக்குகளாக ஆதரவாளர்கள் கருத வேண்டும்."– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் -09.10.2024




உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமானவர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உருவாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது




வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒரு முறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகுமுறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சளி அல்லது முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உரிய சிகிச்சை மேற்கொள்ளவும். பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவனமாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன்ஆற்றுவீர்கள். உங்கள்செயல்திறன்நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள திண்ட்டங்களில் முதலீடு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று காணப்படும் பதட்டத்தை சமாளிக்க சமநிலையான அணுகுமுறை தேவை. திருப்தியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




இன்று தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்குக் கவலையை உண்டாக்கும்.

பாதுகாப்பற்ற நிலை காரணமாக தலைவலி உயரழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாவீர்கள்.




இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது




இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தியான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை இரிக்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் திருப்தியான உணர்வு காணப்படும்.

உங்களிடம் நிறைந்திருக்கும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -09.10.2024




ஆன்மீகசொற்பொழிவுகளைகேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் நல்லது.

பயணத்தின்போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

ஒவ்வாமை காரணமாக இன்று தொண்டை வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள்.உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்..




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் சமயோசித புத்தி இன்றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மனநிலை உங்கள் பணியில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். லாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

